


மலேசியாவின் பினாங்கு மாநிலத்தில், THE RISE – எழுமின் அமைப்பின் சார்பில் நடைபெற்ற 15வது உலக மாநாட்டில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் மலேசியாவின் பினாங்கு மாநில முதலமைச்சர் சௌகான் இயோவ் (CHOW KON YEOW), பினாங்கு மாநில ஆட்சிக் குழு உறுப்பினரும் வீடமைப்பு மற்றும் சூழல் துறை அமைச்சருமான டத்தோ சுந்தராஜு, THE RISE – எழுமின் அமைப்பின் நிறுவனர் தமிழ்ப்பணி ம.ஜெகத் கஸ்பர், மலேசியா எழுமின் அமைப்பின் தலைவர் சின்னப்பன் ஆகியோர் கலந்துகொண்டனர். தொடர்ச்சியாக மூன்று நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்ட தொழிலதிபர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் பங்கேற்றுள்ளனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 179 வது நாள்!

## அம்பத்தூர் தெற்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, ஆக. 18 -

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுத கரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 179 வது நாள் துறைமுகம் தொகுதி இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல்படி உணவு வழங்கப்பட்டது.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 179 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (17.08.2025), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் மேற்கு பகுதி, வட்டம் 57 அ, ஆச்சாரப்பன் தெரு, தாதாமுத்தியப்பன் தெரு சந்திப்பு. 2) துறைமுகம் கிழக்கு பகுதி, வட்டம் 55, ஏழு கிணறு, 55 ஆவது மாமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொது மக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி. ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி. எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ், வட்டச் செயலாளர்கள்: எல்.சத்திய நாராயணன்,

எஸ்.புகழேந்தி, ஆர்.எ. அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா. பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க. பா.பிரதீப்கு மார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! சரிதா மகேஷ்குமார் எம்.சி. தலைமையில்

# கொளத்தூர் தொகுதியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நல உதவிகள் வழங்கும் விழா!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி – மேயர் பிரியா ராஜன் வழங்குகின்றனர்!

சென்னை, ஆக. 18 -

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கொளத்தூர் தொகுதியில் ஆகஸ்ட் 7 - "போராளி ஓய்வதில்லை" மறக்க முடியுமா - 10, சுயமரியாதை ஒளிதந்த கலைஞர்! தொகை தந்து வழிதந்தார் தலைவர்! எனும் தலைப்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (18.08.2025 - திங்கட்கிழமை) மாலை 5 மணி அளவில், சென்னை, கார்த்திகேயன் சாலையில் உள்ள திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

தலைமை பொதுக்குழு உறுப்பினர், 6 வது மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், புனிதவதி எத்திராசன் எம்.சி, எஸ்.பன்னீர்செல்வம், வானவில் விஜய், எஸ்.தனசேகர், துரை கண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், சுதா தீனதயாளன் எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கொளத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள் எம்.தாவூத்பி, யோகப்பிரியா தனசேகர், பி.அமுதா பொன்னிவளவன், சி.ஸ்ரீதணி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கருணாநிதி வீராசாமி, கழக சட்டத்திட்ட திருத்தக் குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி, கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, கழக பொறியாளர் அணி இணைச் செயலாளர் வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் தலைவர் ப.ரங்கநாதன், கொளத்தூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் இரா.விடுதலை, கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி எம்.சி, தமிழன் பிரசன்னா, சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, கவிஞர் நன்மாறன், எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, பரிதி இளம் சுருதி எம்.சி, ஆர்.வரதன், வே.உமாகாந்த் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், மண்டலக்குழு, நிலைக் குழு தலைவர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

68 வது வட்டக் கழகச் செயலாளர் கே.பி.ஆதவன்மணி நன்றி கூறுகிறார்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ ஆலோசனை வழங்குகிறார்!

# மயிலை கிழக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் எஸ்.முரளி அறிக்கை!

சென்னை, ஆக. 18-

மயிலை கிழக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என பகுதிச் செயலாளர் எஸ்.முரளி அறிவித்துள்ளார். இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

இது குறித்து கிழக்கு பகுதிச் செயலாளர் எஸ்.முரளி அறிக்கை வருமாறு:

மயிலை கிழக்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் பகுதி அவைத் தலைவர் எஸ். முனுசாமி தலைமையில் இன்று (18.08.2025 - திங்கட்கிழமை பகல் 12மணி அளவில் மயிலாப்பூர் சட்டமன்ற அலுவலகத்தில் நடைபெறுகிறது

இதில் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார்.

இதில் சீமன் சேகர், பி.எல்.தாஸ் எ குமாரி எல்.உதயகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்டக் கழக செயலாளர்கள் ஏ.தாஸ், மா.பா .அன்பு, அ.தவனேசன், வெ.வெற்றிவேல் கோ கண்ணன், துரை பார்த்திபன், பா. பொன்னுசாமி மயிலை கிழக்குப் பகுதியில் உள்ள வட்டக் கழக செயலாளர்கள், அனைவருக்கும் நடைபெறும் கூட்டத்திற்கு கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.


